

மறைந்த மாணிக்கச்சுடர்

ஆசிரியை

# ஞானப்பூ இராமநாதன்

அவர்களின்

# வாழ்க்கை நதியில் சில துளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரே உமைநோக்கி என்
## ஆன்மாவை எழுப்பினேன்



மண்ணில்

12 - 07 - 1915

விண்ணில்

23 - 09 - 2009

நெடுந்தீவு உதயபதி வாசரும் மேழிக்கொடி பிடித்த
தனிநாயக முதலி கந்தப்ப முதலி வழித்தோன்றலும்
அமரர் கந்தையா இராமநாதன் J.P
[அதிபரும், மரண விசாரணை அதிகாரியும்]
அவர்களின் வாழ்க்கைத் துணைவியும்
யாழ். வண்ணையம்பதி கொலைவிலக்கி மாதா
நினைவாலயத்திற்குரிய பெருமகள்
பொலிஸ் அதிகாரி சாள்சன் கந்தையா – நாகமுத்து
தம்பதியின் மருமகளும்
சவேரிமுத்து ஜெற்றூட்டம்மா தம்பதியின்
மகளுமான

# அமரர் திருமதி ஞானப்பூ இராமநாதன்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்

ஆளுக்கொரு தேதி வைத்த அமலனே ஆண்டவனே

எம் அன்னைக்கொரு தேதி வைத்தாய் விலக்க முடியுமோ

பாரினிலே அவள்தன் யாகம் நிறைவாய் ஆற்றி

பாசத்தோடுனைப் பார்க்க வந்தாள் இங்கு

பண்புமிகு எச்சங்களை மிகுவாய் ஆக்கி

தேரில் உனைச் சந்திக்க வந்தாள் காண்பாய்

திருவருளே அருள்வடிவே பணிந்தோம் பாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வற்றாத ஜீவநதியாய் வளம்மிக்க நெல் வயலாய்
உற்றார் உறவினரோடு கற்போர் தனும் அடங்க
நற்றாயாயணைத்து நயமுடன் துன்பம் தீர்த்து
பற்றாய் நீ அனுப்புவதைப் பார்த்தே பயின்றோமம்மா
உனைப் போலும் தந்தை போலும்
வாழ்வதே எம் நோக்கம்
எம் பிள்ளைகளும் அவ்வாறே ஒழுகுவதும் நீயறிவாய்
ஒளி விளக்காய் நாம் வாழ வழிவகுத்த பெற்றோரே
சிறு விளக்காம் இம்மலரை சமர்ப்பித்தோம் உங்களுக்கு

பிள்ளைகள்

# நாடு

ஆவின்பால் ஆறெனவே பாய்ந்து வந்த நாடு
அறநெறியும் அலைகடலும் அடி காட்டும் நாடு
பாவின் பால் சுவை கூட்டும் புலவோர்கள் நாடு
பயிலுகின்ற மூலிகைகள் பொற்சிந்தில் நாடு
தேவின் பால் சிந்தை வைத்தோர் திகழ்கின்ற நாடு
தீவுகளின் திலகமெனச் செப்புகின்ற நாடு
நாவின் பால் தேன் சொரியும் நற்சிறப்பு நாடு
நன்னாடாம் பொன்னாடு நெடுந்தீவேயன்றோ

- அழகு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Delivery from Heaven*

Sorry I had to leave you all
Avoiding prior notice purposely
I know well that I was to leave
But I didn't tell you frankly because
I cannot bear seeing you in tears
I am glad and fully satisfied
Over the 95 year race which I had run

Now I am going to meet my husband & three children
Who had gone before & waiting for me
An upright man finds life through faith
So don't loose faith till we meet again
Rise up and work for time is short
To meet a good Death & Reach my shore
Darling children give up mourning and
eonsole my grand children who are in tears
Ladies and gentlemen including my friends
Sisters and brothers who love me true
Thanks for the garlands and flowers you placed on my grave
Thanks for the condolences that you conveyed
I'll treasure your love through eternity.

**Mrs.Gnanapu Ramanathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமுதல்வர் அருட் கலாநிதியஸ்ரின் ஞானப்பிரகாசத்திடமிருந்து இரங்கற்செய்தி

நாம் இவ்வுலகில் குடியிருக்கும் கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று உண்டு.

(2கொரி 5:1)

அமரர் ஞானப்பூ இராமநாதன் நெடுந்தீவு மக்களின் கல்வி வளர்ச்சியிலே தன் அர்ப்பணமிக்க சேவையால் பெரும் பணியாற்றியதுடன் இறைசேவையிலும் உயர்ந்து விளங்கியுள்ளார். எளிமையும் இன்சொல்லும் இயல்பாகவே அமையப் பெற்றதால் அனைவரையும் அணைத்துச் செல்லும் நற்பணியாளராக வாழ்ந்து தனது பிள்ளைகள் மாணவர் சுற்றத்தார் யாவரையும் நல்நிலைக்கு உயர வழிகோலியுள்ளார். இவரது இழப்பால் துயருறும் இவர் மக்கள், மருமக்கள், பேரர், சகோதரர்க்கு என் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் இவ்வுலகக் கடமைகளை மிகச்சிறப்பாக நிறைவேற்றிய இவர் நித்திய மகிழ்ச்சியில் இளைப்பாற வேண்டுகிறேன்

அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண.Dr. ஞா.பிலேந்திரன்
## (விரிவுரையாளர், ப.க.யாழ்ப்பாணம்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி ஞானப்பூ இராமநாதன் அவர்கள் இறையருளால் 95 ஆண்டுகள் வாழ்ந்து 23.09.2009இல் இயற்கை எய்தினார். இவரது பிரிவால் வருந்தும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்களுக்கும், உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

தம் வாழ் நாளில் 25 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி பல மாணவியருக்கு கல்வியிலும் நன்நடத்தையிலும் பண்பிலும் உருவாக்கமளித்து சமூகத்திற்குப் பெரும் பணியாற்றியுள்ளார். பொறுமை, சாந்தம், விருந்தோம்பல் என்பன இவரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளாகும். இவரது முதிர்ந்த வயதில் இவருக்கு திவ்விய நற்கருணையை இவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லும் போது இவர் தம் விசுவாசத்தை அறிக்கையிட்ட விதம், இளமை முதல் எவ்வாறாக ஆழமான இறைபற்றுள்ளவராக வாழ்ந்திருப்பார் என்பதை ஊகிக்கக் கூடியதாயிருந்தது.

இவர் தாம் பெற்ற இறை விசுவாசத்தை தம் பிள்ளைகளுக்கு மளித்து அவர்களைச் சிறந்த எடுத்துக்காட்டான கிறிஸ்தவர்களாக உருவாக்கி யுள்ளார். இவரது உதார குணமுள்ள விசுவாச வாழ்வின் பொருட்டும் சமூகத்திற்கு ஆற்றிய நற்செயல்களின் பொருட்டும் இறைவன் இவருக்கு நித்திய சம்பாவனையை நிறைவாக அளிக்கவேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

இறைவா உம் புனிதர்கள் ஒன்றிப்பில்
இவரையும் இணைத்தருளும்

பங்குத்தந்தை
புனித அன்னாள் ஆலயம்,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை ம. றெஜி இராஜேஸ்வரன்
# அவர்களின்
# ஆசிச்செய்தி

இளைப்பாறிய ஆசிரியை ஞானப்பூ இராமநாதனுடைய மறைவு பலருடைய உள்ளத்தில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அவருடைய பிள்ளைகள், அவர்கள் குடும்பத்தினருக்கு அவர் மறைவு பெரும் இழப்பாகும்.

அன்புள்ள மனைவி, பாசமுள்ள தாய், அறிவும் பண்பும் நிறை ஆசிரியவர் எல்லோருக்கும் இனியவர். இவ்விதம் வாழ்ந்து குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். இவருடைய அன்பில் நிறைந்தவர்கள் பாசத்தை அனுபவித்தவர்கள் வழி நடத்துதலில் நடத்தவர்கள் இவர் மறைவைக் கண்டு துயர் அடைந்து சோர்ந்து போய் நிற்கின்றார்கள்.

பல சிரமங்கள் மத்தியிலும் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நின்று பிரமாணிக்கத்துடனும் பிரியத்துடனும் கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து வாழ்ந்தவர். அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக அமைதியும் ஆறுதலும் நிறைந்த இடத்தை ஆண்டவன் இயேசு அவருக்கு அருள்வாராக.

பங்குத்தந்தை
அடைக்கலமாதா ஆலயம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்கலாநிதி அ. பி. ஜெயசேகரம்

## அம்மா அவள் எனக்காக காத்திருப்பாள்!

தாயன்பிற்கு உரித்தான அனைத்து வளங்களுடன் நெடிய காலம் எம்முடன் இருப்புக்கொண்டு அமரத்துவம் அடைந்த ஞானப்பூ இராமநாதன் அவர்களின் 31 நாள் நிறைவில் அவர் விட்டுச்சென்ற வாழ்வு விழுமியங்களை, குடும்ப உறவுகள், நண்பர்கள் ஊடாக மீட்டுக்கொள்வதற்கும், அவைகளை அறிந்து நாமும் பின்பற்றுவதற்கும் வகையாக வெளியிடப்படும் குறுமலருக்கு செய்தி கொடுப்பதில் நிறைவடைகிறேன்.

அம்மாவை முன்னர் அறிந்திருந்தாலும் அவருடனான உறவு குருத்துவப் பணி மூலமாக எனக்கு எட்டியது. கடந்த மூன்று வருடங்களாக நற்கருணை கொடுத்து வந்ததில் தொடர்பு வளர்ந்தது. என்னைக் கண்டதும் கையெடுத்து கும்பிட்டு வணக்கம் சொல்லுவார். சுகம் விசாரிப்போம்... நற்கருணை செபத்துக்கு பக்தியாக மறுமொழி சொல்லுவார். இறுதிவரையும் செபங்களை மறக்காமல் மொழிவார். வீட்டிலுள்ள தங்கை கிளி, நிரஞ்சன், நிலானி வழிபாட்டில் இணைந்து கொள்வர். சற்று நேரம் இருப்போம். மௌன நிலையில் ஒரு உடன் இருப்பு!

ஒரு நாள்... அடுத்த ஞாயிறு வரமுடியாமல் இருக்கலாம் என்று கூற, அம்மா “உங்கள் வசதியின் படி வாருங்கள் பிந்தினாலும் பறவாயில்லை... உங்களுக்காக காத்திருப்பேன் என்றார். அதன் பிற்பாடு எனது உறவும் வளர்ந்தது. எனக்காக ஒரு ஆத்மா காத்திருக்கிறாரென்று கிரமமாக நற்கருணை கொண்டு வருவேன். பல காத்திருப்புக்கள் ஊடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை அவள் தனது வாழ்க்கையை நகர்த்தினாள். மூன்று பிள்ளைகளையும் அத்துடன் இளம் பேத்தியையும் பறிகொடுத்தார். அவர்களின் வளமான வாழ்க்கைக்கான காத்திருப்புகள் சிதறியது. அனைத்தையும் இதயத்தில் தாங்கி முணுமுணுப்பின்றி இறைவனின் திட்டத்திற்கு தன்னை இசைவாக்கி வாழ அவளின் ஆழமான இறைநம்பிக்கை பக்கபலமாக இருந்தது.

வயோதிபத்தின் பல காத்திருப்புக்கள்!
உறவுகளுக்காக காத்திருந்தாள்
பிள்ளைகள் வருகைக்காக காத்திருந்தாள்
பின்னர் எனக்காக காத்திருந்தாள்
நான் கொணரும் நற்கருணையை பெற காத்திருந்தாள்
இந்நற்கருணையில் இருந்து உயிர்பெற்று
உயிர்ப்பு நோக்கிய பயணத்துக்காக துணிவுடன் காத்திருந்தாள்
விடைகள் தேடாது வினாக்களை வாழும் காலமிது
இறைவனின் திட்டத்திற்கு தன்னை அர்ப்பணமாக்கி வாழ்க்கையில் வினாக்களை வாழவதற்கு சக்தி கிடைக்கும். இவ்வாறாக சக்தியில் வாழ்ந்த அம்மா இறைவனின் தோழமையிலும் அரவணைப்பிலும் சாந்தி அடைவாராக!

அருட்கலாநிதி அபி. யெயசேகரம்
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் புலவர் அரியநாயகம்

திருவளருங் கறவையினம் மடிசொரிந்து
வழிநெடுகச் செழும் பாலைச் சிந்தும் நாடு
திரைவாசி வாரிவந்து வலம்புரியை அரணாகச்
சேர்த்தார்த்து மகிழு நாடு
மருவளமும் பொற்சீந்திலுறவுண்டு நீடாயுள்
மலிந்துயிர்கள் மறையா நாடு எனக் கவிஞர்களால்
புகழப்பட்ட பசுந்தீவு எனும்
நெடுந்தீவின் உயர்குடியில் பிறந்த
திருமதி ஞானப்பூ இராமநாதன் அவர்கள்
மறைந்த செய்தி அறிந்து மிக்க
கவலையும் வேதனையும் அடைந்தோம்

மரணம் அடைதல் யாவர்க்கும் பொதுவான நிகழ்வு எனினும் சிலரின் இழப்பை எம்மால் தாங்க முடியாததாயிருக்கும் என்பது மிகவும் உண்மை.

நெடுந்தீவின் கல்வி சமய சமூக வளர்ச்சிக்கு திரு. திருமதி இராமநாதன் ஞானப்பூ தம்பதிகளும் அவரின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆற்றிய பணிகள் தீவக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்றாகும். அன்பு, இரக்கம், கருணை எனும் பண்புகள் நிறையப்பெற்று நெடுந்தீவிற்கே தனித்தன்மையான விருந்தோம்பல் பண்பிலும் இறைபக்தியிலும் சிறந்து விளங்கிய அன்னாரின் மறைவு எம் தீவகத்திற்கு பாரிய இழப்பே. அன்னாரை இழந்து துயருறும் அன்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்க்கு எம் தீவக மக்கள் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இழப்பால் துன்புற்றுத் துயருறும்
கலாபூஷணம் புலவர் அரியநாயகம் J.P
முன்னாள் பிரதேச சபைத்தலைவர்,
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

வரலாற்று பெருமை வாய்ந்த பசுத்தீவு என்னும் நெடுந்தீவின் உதயபதியில் மறைந்த மாதரசி ஞானப்பூ என்பவர் 12.07.1915 இல் பிறந்தார்.

அவருடைய தந்தையார் தம்பிமுத்து என்னும் சவரிமுத்து என்பவராவார். தாயார் சேதுப்பிள்ளை ஜேற்றூட் என்பவராவர்.

நெடுந்தீவு மத்திய றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் வேறுபல உயர்நிலை பாடசாலைகளிலும் அதிபராயிருந்த சின்னப்புநாயகம் அவர்களும் அதிபர் செவாலியர் சிறப்பு கலாநிதி தமிழ்சங்க அமுது எனப்படும் அடைக்கலமுத்து அவர்களும் தபால் திணைக்களக் கணக்காய்வாளரும் அத்துறையில் எழுதுவினைஞராகவும் செயலாளராகவும் விளங்கிய அலெக்ஸ் செபரத்தினமும் இவருடைய உடன் பிறப்புக்களாவார்.

நீண்ட காலம் அதிபராகவும் மரண விசாரணை அதிகாரியாகவும் சமாதான நீதவானாகவும் விளங்கிய கந்தையா இராமநாதன் என்பவர் இவருடைய கணவர். இல்லறம் என்ற நல்லற வாழ்வில் எட்டு மக்களை கண்டனர்.

நெடுந்தீவு மகா வித்தியாலய முன்னாள் அதிபர் புஷ்பவதி அன்ரனி B.SC அவர்கள் தபால் திணைக்கள தபாலதிபராக இருந்து தற்போது கனடாவில் வாழும் சீவரத்தினம் அவுஸ்ரேலியா மெல்போன் பல்கலைக்கழக விரிவுரையாளர் பாக்கியலீலா செருபீம் M.Sc, அவுஸ்ரேலியா ஜெயராசா (முன்னாள் விஞ்ஞான ஆசிரியர்) பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் சட்டத்தரணியாக யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அமரர் ஜெயசிங்கம் J.P, UPA, நெல் சந்தைப்படுத்தும் திணைக்கள நிர்வாக அதிகாரி ஜெயபாலன், கனடாவில் வாழும் முன்னாள் விஞ்ஞான ஆலோசக ஆசிரியர் ஜெயசீலன் B.SC, ஆசிரியராக பணிபுரிந்த பத்மராணி என்போர் இவருடைய அருமை மக்களாவார்.

திருமதி ஞானப்பூ ஆசிரியையாக மல்லாகத்திலும் நெடுந்தீவு மத்தியிலும் கற்பித்து பின்னர் இளைப்பாறினார். இளைப்பாறிய வேளை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் பாராட்டு விழாவில் தங்கச்சங்கிலி வழங்கினர்.

ஞானப்பூ அவர்கள் பெண்களின் திலகமாகவும் உத்தமமான உயர் குணங்கள் நிரம்பியவராகவும் வாழ்ந்து வந்தார். ஏழைகளை ஆதரிப்பதும் அவர்களுக்கு உதவி செய்வதும் அவர் இயல்பு. மலர்ந்த முகமும் இனிய பேச்சும் சமுதாயம் அவருக்கு மதிப்பளிக்க செய்தன. சாந்தமும் அமைதியும் அவரோடு கூடப்பிறந்தவை.

நேச மகனான நெல் சந்தைப்படுத்தும் திணைக்கள நிர்வாக அதிகாரி ஜெயபாலன் இளமையிலே கண்மூடவே தாயாருக்கு சஞ்சலத்தினையும் வருத்தத்தினையும் கட்டியெழுப்பியது. மகள் பத்மராணியினதும் கணவரினதும் மகன் சட்டத்தரணி ஜெயசிங்கத்தினதும் மரணம் அவரை வாட்டி வதைத்தது.

மனித நேயமும் ஒப்பற்ற உயர்ந்த குணங்களும் உடைய ஞானப்பூ மக்களாலும் கற்றோராலும் பெரிதும் பாராட்டப்பெற்றவர். தீவுக்கு தரிசனம் செய்வோருக்கு அவரில்லம் ஒரு அன்னசத்திரமாக விளங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வபக்தியும் மாதா பக்தியும் நிம்பியவர் ஞானப்பூ. மாதாவே குடும்பத்தின் பாதுகாவலாக நினைத்து வாழ்ந்தவர் ஆவார். எந்தக்காலமும் எல்லோருடனும் அன்பாகவும் சமாதானமாகவும் பழகுவதில் ஒரு அற்புதமான பொற்கோயில். அன்பும் அடக்கமும் உடையவர். அகந்தை என்பதை அறியாதவர். இல்லாதவரிடம் எப்போதும் இரக்கம் உடையவராக வாழ்ந்து வந்தார். பெரியோர்களைக் கனம் பண்ணுவதிலும் அவர்களை ஆதரிப்பதிலும் அவருக்கு நிகர் அவரே. மக்களை மதித்து அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமானவர். பிள்ளைகளின் உயர்கல்விக்கு இளமையிலேயே வழி கோலியவர் அவரே.

பிள்ளைகள் ஆசிரியபணியிலும் வழக்கறிஞர் பதவியிலும் அரசாங்க சேவைகளிலும் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் மகா வித்தியாலய அதிபராகவும் விளங்குவதற்கு பாலம் அமைத்த பெருமை அம்மையாருக்கே உரியது. நிறைவாழ்வு பெற்று இறைவன் சந்நிதியில் இன்பமாய் வாழ வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிய தம்பி அழுது புலம்பல்

பிறவித்துயரோ பெருந்துயர்!

பொன்னின் நிறமும் பூச்சொரிதல் போல் மொழியும்
பெண்ணின் உயர் பண்புகளும் பெற்றவளே - என்னரிய
ஞானப்பூ என்றறிந்து நல்லோர்கள் போற்றும் அக்கா
வானப்பூ ஆகிவிட்டாய் - வான்

கருணை கொண்ட நீதி நெஞ்சம் மறையலாமோ?
கையினிலே செபமாலை தளரலாமோ?
அருள் பொங்கும் பூஞ்சொற்கள் குறையலாமோ?
அண்டியவர் துயர் வெள்ளம் மறையலாமோ?
பெருநிலவு போலிந்த பிரிய அக்கா
பிள்ளைகளின் தெள்ளமுதே பிரியலாமோ
குரல் மங்கி போனதக்கா அழுகையாலே
கோபுரம் போல் இருந்த இடம் குழியாய்ப் போச்சே!

தம்பியென எனை அழைத்த இதழ்கள் எங்கே?
தளிர் போல எனை அணைத்த கைகள் எங்கே?
அம்புவியில் அன்பு கொட்டும் முகமும் எங்கே?
அமுதமென உணவளித்த கரங்கள் எங்கே?
செம்பினிலே பால் தூர்த்த தர்மத்தின் கோயில்
செந்தமிழ் போல் சிரித்திருக்கும் உருவம் எங்கே?
எம்பிரான் எனக்களித்த அக்கா எங்கே?
இனி யாரோ தம்பி என்பார் உலகம் ஃதோ?

பாரியொடும் கொடை போச்சு பாடல் கண்டோம்
பார்த்தனொடும் கணை போச்சு அதையும் கேட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் சொரிய எனைப் பிரிந்த ஜெயத்தினோடு
நெஞ்சத்து நினைவெல்லாம் இடிந்து போச்சு
தேரெனவே வாழ்வினிலே துணையாய் வந்த
சீதையோடு அறமென்ற தீபம் போச்சு
மாரியென அருள் சொரிந்த அக்காவோடு
மண்ணிலே அன்பென்ற வார்த்தை போச்சே!

## மூத்த மகளார்
## திருமதி புஸ்வதி அன்ரனி B.Sc
## [முன்னாள் நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர்]
## புலம்பல்

தேன் மொழியில் என் பெயரை அழைத்த தாயே!
தேரினிலே எனைச் சுமந்த சிறப்புத் தாயே!
யான் பெற்ற செல்வங்கள் வளர்த்த தாயே!
நாவினிலே பூ வாடை வீசும் தாயே!

வான் செய்த மாரியென கண்ட தாயே!
வண் கல்விப்பணி செய்ய வளர்த்த தாயே!
மான் பெற்ற கண்களேயே பெற்ற தாயே!
மணி மகுடம் போலிருந்து மாய்ந்த தாயே!

ஆங்கிலத்தில் திறமை பெற ஆய்ந்து பார்த்து
அதி சிறந்த வேம்படியில் சேர்ந்து விட்டாய்
ஓங்கி வளர் விஞ்ஞானம் கற்கச்செய்தாய்
உயர் பட்டம் பெறச் சென்னை அனுப்பி வைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்காமல் நிழலாக வாழ்வில் நின்றாய்
நெஞ்சில் பூச் சொரிந்தாய் நினைவேன் அம்மா!
பாங்காகப் பக்கத்தே பணிகள் செய்தேன்
பரிதவிக்க கடைசியிலே பிரிந்தேன் அந்தோ

## கனடாவில் வசித்து வரும் மூத்த புதல்வன் திரு.ஜீவரட்ணம் அவர்களின் கண்ணீர் அஞ்சலி

பந்தலிலே மணம் முடித்த பழைய கதை நினைத்தேன்
பருவத்தே பெற்றிருந்த பதவிகளை நினைத்தேன்
சொந்த பந்த உறவுகளை பேணி வந்த அம்மா!
சொர்க்கத்தில் ஒரு துண்டை உன் காலடியில் கண்டேன்

சிந்தையிலே முதல் மகனை சீராட்டி வளர்த்தாய்
சீமாட்டி நான் உனது கால்மாட்டில் அழுதேன்
நந்தவனம் போலூருக்கு நாம் ஒரு நாள் வருவோம்
நல் அமைதி மஞ்சத்தில் துயில் கொள்வாய் அம்மா

கனடாவில் இருந்து உம்மை காணப்பதற்கு வந்தேன்
கால் நீட்டி கண்மூடி படுக்கையில் கிடந்தீர்
இனிதாக உயிர் நீத்த புனித உயிர் கண்டேன்
இரு கண்ணால் நீர் வார்த்தேன் என்னருமைத்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர்களின் உலகிற்கு போய் விட்டீர் அம்மா
புத்திரர்கள் சோகத்தின் நெருப்பினில் வீழ்ந்தோம்
மனிதர்களில் நாம் கண்ட மாதரசி நீயே
வாழ்நாளில் நாம் மறவோம், வாழ்வீர் பொன்னூரில்

## அவுஸ்திரேலியா மெல்போனில் வசித்து வரும் திருமதி பாக்கிலீலா செருபிம் M.Sc [முன்னாள் விரிவுரையாளர், மெல்போன் பல்கலைக்கழகம்]

ஆவியிலும் இனியவளே அருமைத் தாயே
அன்புக்கோர் மறுபெயரே தெய்வமே! நிலவே
நாவினிலும் நெஞ்சினிலும் வாழ்க்கை முற்றும்
நடமாடும் மெல்லிசையே! அடியாள் கற்க
காவினிலே கலைக்கூடம் திசைகள் போற்றும்
கலைச்சோலை பேராதனைக்கு சென்றேன்
ஆவலுடன் பரீஸ்டர் செரூபிம் மணமுற்று
அருந்தொடர்பு கொண்டிட்டேன்
நாட்டை விட்டேன்
நாட்டை விட்டு நாமிருவர் வளம்
சிறந்த நைசீரியாவுக்கு பறந்து சென்றோம்

கோட்டை கட்டி அரும்பணிக்கு அங்கே சென்று
குறிப்பிட்ட காலத்தால் அவுஸ்ரேலியாவில்
பட்டோடு பயன் போல வாழ்ந்தபோது
பாசத்தால் உம்மை எண்ணி பறந்தே வந்தேன்
வாட்டமில்லா உம் முகத்தை காணும் போது
வாழ்வினிலே இன்பத்தின் எல்லை கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாலே உணவு ஊட்டி கனிவினோடு
கதைகள் பலநாள் கேட்டு சிரிப்புச் சிந்தி
மெய்யாக வாழ்வினிலே நடந்தசெய்தி
மீண்டும் ஒருமுறை கேட்டு மகிழ்ந்து வாழ்ந்தேன்

சாட்டை அடிபோல் மரணச்செய்தி கேட்டேன்
சடுதியில் உடன் பறந்து இங்கே வந்தேன்
கோட்டை ஒன்று சாய்ந்ததம்மா குலத்தின் வேர்கள்
குன்றியது என்று இதனை இனிமேல் காண்போம்

## அவுஸ்திரேலியாவில் வசிக்கும் அன்பு மகன் ஜெயராசா [முன்னாள் விஞ்ஞான ஆசிரியர் Dip.Buis & Accts] அஞ்சலி

எல்லார்க்கும் நல்லவளாய் இரக்கம் கொண்டு
ஏழைகளை ஆதரித்து வாழ்ந்த அம்மா!
சொல்லாலும் செயலாலும் தொண்டு செய்தீர்
சுடராக உம்மைப்போற்றக் கடமை செய்தீர்
தொல்லைகளும் துன்பங்களும் தொடர்ந்த காலம்
சோலையெனப் பாலைவனம் மாற்றி வைத்தீர்
அல்லலின்றி யான் கற்றே விஞ்ஞானத்தில்
ஆசிரியனாகிவிட அனைத்தும் செய்தீர்
ஆசிரியப்பணியோடு எழுத்தில் பேச்சில்
அற்புதமாய் நடிப்பதிலே பயிற்சி பெற்றேன்
தேசத்தின் சேவையிலே பங்கு கொள்ள
சித்திரமாய் கலைகளிலே சேவை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசத்தின் வாய்க்காலை வெட்டி விட்டீர்
நெஞ்சினிலே பால் வார்த்த நேசத் தாயே!
பாசத்தால் புலம்புகின்றேன் அன்பில் தோய்ந்து
பழமரமே நிழல் மரமே பறந்தாய் ஏனோ?

## கனடாவில் வாழும் இளைய மகனார்
## ஜெயசீலன் B.Sc
## கண்ணீர் அஞ்சலி

நிலமணி விழிகொண்ட பொற்கோயில் இடிந்ததென
நெஞ்சிலே நினைந்தழுவனோ?
நேசத்தின் இருப்பிடம் பூமியில் இல்லையென
நிலத்தில் வீழ்ந்தழுவனோ?
சீலனே என்றென்னை அன்புடன் அழைத்திட்ட
தேன்குரல் நினைந் தழுவனோ?
தேவர்களும் பாராட்டும் குணக்குன்றாய் வாழ்ந்திட்ட
சீலத்தை நினைந்தழுவனோ?
கற்றுயான் உயர்ந்திடச் செய்துவந்த தியாகங்கள்
கண்மூடி நினைத்தழுவனோ?
சாலவே என்பிரிய தாயாரே! மக்களைத்
தாரகைகள் ஆக்கி வைத்தீர்
சாந்தமும் அன்புமே நல்வாழ்வின் வாசலென்ற
தாகத்தை நினைந்தழுவனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருமக்கள்**
**ராஜேஸ்வரி, அரியமலர்,**
**ரட்ணேஸ், நிர்மலா, சர்வதாரிணி**

புன்னகையும் தண்ணளியும் கொண்ட மாமி

பொழுதெல்லாம் பொன்னுரையே புகழும் மாமி

எந்நாளும் எமை மகளாய்ப் பேணும் மாமி

இன்னுரையால் கவலைகளை எரித்த மாமி

முன்னாளில் வாழ்ந்த குலப் பெண்கள் போல

மூவுலகும் போற்றுகின்ற குணத்தின் செல்வி

என்ன குறை நாம் புரிந்தோம் அன்புத் தாயே

எம்மைவிட்டுப் பிரிந்திட்டீர் எங்கே காண்போம்?

## *To our beloved grandma from London*

We called you amma because you were more than an ammama. The love you showered on us is priceless we loved you so much and you loved us so much that. we cannot describe it in words. You always did your best to keep us happy & shining. You were always ready to support us whenever we got into trouble. You always saved us from our mum's anger. But at the same time you used to advise us with love and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pity and teach us to be right, true and duty conscious. Like our Appa you were always a friend of us and enjoyed life's good moments with us. Ignoring all difficulties you used to come to us to celebrate our birthdays. Sweet memories of your's will be cherished in our hearts and you will always live in our hearts. We miss you a lot. You were not just a grand mother but were a grand - grand – mother we cannot refrain from weeping You have gone without bidding good bye to us. Any how we are sure that your holy soul will always be with us. Lead us kindly light lead.

Your loving grand children

Franco, shima

Carolini – Balasrikaran

## தலைப்பேத்தி நாளினி கிஷோக்குமார் [ஆசிரியை] புலம்பல்

அன்பென்றால் அம்மம்மா அகரவரிசையில்

ஆயிரம் வினாக்கள் என்மனதில் எழுகின்றன

இருளில் எம்மைத் தனியாக விட்டுவிட்டு

ஈசனிடம் போவதற்கு ஏன் இந்த அவசரம்

உள்ளத்து உணர்வுகளை உள்ளேயே உறங்கவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமையாக விரைந்தீரா ஈசனிடம் சரணடைய
எந்த விதமான சலனமுமின்றி ஏன் இந்த அவசரம்
ஏமாற்றிச் சென்றுவிட்டீர் சொல்லாமல் கொள்ளாமல்
ஐயம் கொண்டு விட்டீரோ நாம் அன்பில்லையென

ஒரு வார்த்தை கூடச் சொல்ல விரும்பவில்லையா
ஓடி மறைந்து விட்டீர்கள் இறுமாப்புடன்
ஔடதமாய் இருப்போம் என்று ஏன் எண்ணவில்லை
அலை அலையாய் ஆசை இருந்ததா ஈசனிடம் உறைவதற்கு

பேரர்

நாளினி, கிசோகுமார்

பூட்டப்பிள்ளைகள்

நிதுஷா, நளின்குமார்

## அன்னாரைப் பராமரித்த பேரர் பிரலாபம்

மடிமீது தோள் மீதும் சுமந்த தாயே
மனம் நிறைய எம் நண்பி போல் சிரித்ததாயே
எமையெல்லாம் உயிராக நினைத்த தாயே
இறதி காலம் எனைச் சுற்றி நின்ற தாயே
அம்மம்மா என நாம் அழைத்தறியோம் அம்மா
அம்மா என்றே உன்னை நினைதிருந்தோம் அம்மா
என்னுடன் நீ இறுதி நூறைக் காண்பாயென்றிருக்க
எம்மைவிட்டு ஏனம்மா ஏகிவிட்டாய் இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையால் நான் சோர்ந்து வீடு வந்தபின்னர்
ஆவலாய் உன் முகத்தை ஆவலுடன் பார்ப்பேன்
எந்தன் தாய் உடன்பிறந்தோர் எங்கேயோ இருப்பதனால்
உந்தன் முகம் தன்னில் அவர் முகம் காண்பேன்
சென்ற இடமெல்லாம் உனைக்கொண்டு சென்றோம்
தூண்களாய் உனை நாமும் தாங்கியே நின்றோம்
எனக்கும் உனக்குமுள்ள உறவை யாரறிவார்
என்னுள்ளம் நீயறிந்தே என்னோடே இருந்தாய்
அம்மா உன்னில் நாம் கண்டது
அன்பு, அமைதி, பொறுமை, மகிழ்ச்சி, ஆன்மீகம்
உனக்குப் போட்ட
ஒருபிடி மண்ணில் எம் இதயம்
நிறைந்து போயிற்று காரணம்
எம்முடன் நீ மீண்டும் வாழ்வாய் என்பதால்

ஏங்கும் பேரன் குடும்பம்
நிராஞ்சன் - நிலானி
ஹபிசன்

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

ஆசையுடன் அரவணைக்கும் அருமை அம்மா
அன்புடனே முத்தங்கள் சொரியும் அம்மா
நேசமுடன் பால் பழங்கள் தருவீர் அம்மா
நினைத்தவுடன் நாம் விரும்பும் பண்டம் செய்வீர்
பாசமுடன் கதைக்கப் பாடம் சொல்வீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்காட்டிப் பல் காட்டி உணவும் ஊட்டி
தேசமெல்லாம் பாராட்ட வளர்த்த அம்மா
திசை அதிர அழுகின்றோம் சென்றதெங்கே

## மருமக்கள் பெறாமக்கள் பிரலாபம்

முற்றத்தில் கண்டதுமே முழுமதிபோல் வருவாய்
முகம் மலர்ந்து நகை விரிந்து குசலம் கேட்பாய்
பற்றுடனே பாசத்தைப் பெற்றங்கு நிற்போம்
பால் தேனாய் பொன்னுரைகள் சொல்வீர்கள் மாமி
கற்றவர்கள் குலமணியே காணாதார் மலரே
காலமெல்லாம் கைகூப்பி வணங்கும் தாயே
பெற்றவரில் இனியவளே பிரிந்திட்டாய் தானோ?
பேரருளே பொன்னாட்டில் நினைந்தருள்வாய் அம்மா

## அன்னாரின் சகோதரர்களின் தலைமகன்களின் பிரலாபிப்பில் சிறு பகுதிகள்

***திரு. சின்னப்புநாயகம் மரியசேகரம் அவர்கள்***
***(ரெக் பொறியியலாளர்)***

என்னால் வரமுடியவில்லையே என்ற துக்கம்
தாழமுடியவில்லை என்னருமை மாமிக்கு
என் இதய அஞ்சலிகள் என் மலர் வளையத்தை
அனுப்பி வைக்கிறேன் - போய் வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***திரு. நேரு அடைக்கலமுத்து அவர்கள்***
***(மேன் அமைச்சர் வடிவேல் சுரேசின் ஆலோசகர்)***

என் உயிரனைய மாமியை உயிருள்ளளவும் என்னால்
மறக்க முடியாது இழப்புக்கு என் ஆழ்ந்த
அனுதாபங்கள் லண்டன் நிற்பதால் வருந்துகிறேன்

***திரு. செபரட்ணம் சேவியர்குமார் அவர்கள்***
***(பொறியியலாளர்)***

மாமி என்றால் எனக்குயிர் எனது
அன்புக்குரிய மாமியை இறுதி நேரத்தில்
பார்க்க முடியவில்லையே என்
ஆழ்ந்த அனுதாபங்கள் அவவின்
ஆத்ம சாந்திக்காக வேண்டுகிறேன்


## இளைய மகள் பாக்கியலீலா செரூபிம் முன்னாள் விரிவுரையாளர் புலம்பல்

என் அன்புத் தாயே எம்மை விட்டு நிரந்தரமாய் போய் விட்டீர். உம் அன்பான கனிவான அழகிய முகத்தை நாம் எப்போது காண்போம்.

நானும் எனது கணவரும் திருமணமாகி 1975ம் ஆண்டில் இலங்கையை விட்டுப் போனோம். அன்று தொட்டு இன்று வரை பிறநாட்டில் வாழ்கின்றோம். இலங்கைக்கு நாங்கள் வரும்போது என்மனம் முதலாவதாக என் தாயாரைத்தான் நினைப்பேன். என் வளர்ச்சியில் என் வாழ்க்கையில் நீர் ஒரு வழகாட்டி. என் அன்பின் சிகரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் என்னை "பாக்கிலி" என்று பாசமாகக் கூப்பிடுவீர். எவ்வளவு குழப்படிகள் செய்து என் கூடப்பிறந்த எனக்கு மூத்த அக்கா, அண்ணனை நான் பல தடவை அடித்து காயப்படுத்தினாலும் என் அப்பா தடியால் காயம் வர அடிப்பார். ஆனால் நீர் அதைத் தடுக்கப் பார்ப்பீர். காயங்கட்கு மருந்துபோடுவீர். ஒரு தடவையேனும் என்னை அடித்ததோ கடும் வார்த்தையால் கூட காயப்படுத்தியதோ இல்லை.

என் தெய்வத்தாயே! என் கணவர் உம்மில் அதிக பாசம் வைத்துள்ளார். அவர் உம்மை 2004ல் சந்தித்த பின்னர் காணவில்லை. இப்போதும் உமது இறுதி யாத்திரைக்கும் வர முடியாததற்கும் மனம் வருந்தினார்.

என் மகள் அஞ்சலி உம்மில் வைத்திருக்கும் அன்பிற்கு அளவேயில்லை. சிறு குழந்தையாக நீர் அவளை 7 மாதத்தில் நான் வெளிநாட்டிலிருந்த போது எடுத்து வளர்த்தீர். அச்சிறு வயதில் அவள் உம்மில் வைத்த பாசம் ஒரு சிறிது அளவேனும் குறையவில்லை. அவளுக்கு முதலாம் ஆண்டு பிறந்த நாள் இலங்கையில் உம்முடனும் அப்பாவுடனும் சகோதரர்கள் அவர்களுடைய குடும்பங்களுடனும் நிகழ்ந்தது. அதில் அவளை நீர்தான் எல்லா இடத்திலும் கையில் ஏந்தியவண்ணம் உள்ளீர். அந்த இளம் வயதில் அவள் உம்மில் வைத்த பாசம் வளர்ந்த பின்னரும் அதிகரித்தது ஒழிய குறையவில்லை. அவளுக்கு ஒன்றரை வயது நடந்தபோது நான் வந்து அவளை உம்மில் இருந்து பிரித்துக்கொண்டு போனேன். அவள் கதறிய நிகழ்ச்சி இன்னும் என் மனதில் உண்டு. அப்போது நீரும் அவளை என்னுடன் விடுவதற்கு விட்ட கண்ணீர் மறக்கமுடியாது. நீர் என் மகளின் வளர்ச்சியில் செய்த உதவிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சாகும் வரை மறக்க மாட்டேன். அவளும் அவளது கணவரும் உமது இறுதி யாத்திரைக்கு வரமுடியாமைக்கு மனம் வருந்தினார்கள்.

நான் பல வருடங்கள் வெளிநாட்டில் சீவித்தாலும் பல தடவைகள் வந்துள்ளேன். "அம்மா, அம்மா" என்று கூறி உம் அன்பையும் அரவணைப்பையும் நாடி நாட்டின் பிரச்சினைகளையும் பார்க்காது வந்துள்ளேன். நான் அவுஸ்திரேலியாவுக்குப் பல தடவை வரும்படி கூறியபோது "தாயை இழந்து தவிக்கும் குழ்ந்தைகளாகிய "மதன், சோபி" அவர்களின் பிரிவைத் தாங்கமுடியாது மகள் என்று கூறினீர். நான் பல தடவை அழைத்தும் நீர் மறுத்ததற்குக் காரணம் உமது நாட்டம் எல்லாம் பத்மராணியின் குழந்தைகளின் மீதுள்ள கவனமே காரணம்.

எனினும் நான் 2000ம் ஆண்டு அப்பாவின் இறுதிச் சடங்கிற்கு நெடுந்தீவுக்கு வந்தபோது நீர் மாட்டாத வேளையில் ஓடி ஓடி எனக்கு பனம்பண்டச் சாமான்கள் வேண்டித் தந்தீர் அதை நான் மறக்க முடியுமா? அம்மா தாயே! நீர் எமது தேவைகளை எல்லாம் புரிந்து அளவிற்கு மீறி அன்பும் பாசமும் கொட்டியுள்ளீர். எனது குடும்பம் உம்மை 2002, 2004இல் சந்தித்தார்கள். அது எனக்குப் பெரிய ஆறுதல். நான் 2006, 2007இல் இலங்கை வந்தும் நாட்டின் நிலமை காரணமாகக் கொழும்பில் நின்று மனவேதனையுடன் திரும்பினேன். சென்ற வருடம் 2008இல் வந்து உம்மை என் ஆசைதீர ஆகாரம் ஊட்டி நீர் என்னை வளர்த்தது போல் உம்மை ஒரு குழந்தையாக எண்ணி என் கடமைகள் சிலதைச் செய்தேன். அது எனக்கு ஓரளவு ஆத்மசாந்தியைத் தருகின்றது. அதுவே என் கடைசிச் சந்திப்பு என்று என் மனம் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா என் தெய்வம் நீர் தற்போது இறைவன் சந்நிதியில் எம் அன்பான அப்பா, அத்தார், ஜெயம், பாலன், தங்கச்சியுடன் இணைந்துள்ளீர். ஆனால் எனக்கு என்மகள் அஞ்சலியின் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு உமது அழகையும் உமது நல்ல குணங்களையும் கொடுத்து எனக்குப் "பேரப்பிள்ளையாக" வாரும். அது தான் எனது இறுதி வேண்டுகோள். "இறைவனின் சந்நிதியில் உம் அன்பானவர்களுடன் சந்தோஷமாக இருந்து எம் எல்லோரையும் வழி நடத்தும் அம்மா"

அன்பு மகள் பாக்கியம்
மருமகன் செருபிம்
பேர்த்தி அஞ்சலி

## மூத்த மகன் சிவரட்ணம்
## [முன்னாள் தபாலதிபர்]

நிற்கதியாய் நிற்கின்றோம்
நினைவலைகள் வருத்துதம்மா
கண்ணில் இனிக் காணமாட்டேன்
எண்ணி ஏங்குகிறேன்
பலகாத தூரத்தைக் கடந்தே இருந்ததனால்
பால் வார்க்க முடியவில்லை பயணமும் கூறவில்லை

அம்மா உங்களுக்கு மூத்த மகனாகப் பிறந்ததில் கடவுளுக்கும் நன்றி கூறுகிறேன். உங்கள் வாழ்நாளில் கணவருக்கு உற்ற துணைவியாகவும் பிள்ளைகளுக்கு இலட்சிய அன்னையாகவும் வாழ்ந்தீர்கள். உதாரணமாக நான் கற்றனில் தபாலதிபராக இருந்தபோது விடுமுறைக்கு நெடுந்தீவு சென்றேன். சென்ற அன்றே எனக்கு மூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தம் தொடங்கியதால் பெற்றோர் என்னை யாழ் கொண்டு சென்றீர்கள். வைத்தியர் ஊசி ஒன்றைப் போட்டார். நீங்கள் நெடுந்தீவு திரும்பலாம் மாறிவிடும் என்றார். அன்றிரவு நெடுந்தீவில் எனக்குச் சிறிது சிறிதாகக் கடிக்கத் தொடங்கியது. உடனேயே என் பெற்றோர் சகோதரர்களையும் தவிக்க விட்டுவிட்டு திரும்பவும் கடல் கடந்து யாழ் கொண்டு சென்றீர்கள் போகும் போது என் தாயே கண்ணீர் சிந்தியபடி செபமாலை சொல்வதில் ஈடுபட்டீர்கள். என் தாயின் துடிப்பு என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. வைத்தியர் மாற்றூசி போட்டு என்னைக் காப்பாற்றினார். இது போல் உங்கள் கணவர் பிள்ளைகளிடம் உற்றார் உறவினர் எல்லோரிடமும் அன்பும் பாசமுமாய் பழகி வந்தீர்கள். பண்பிலே சிறந்தவராய் சகலருக்கும் நல்லதையே செய்யும் அன்னையுங்கள் ஆசியாலும் மன்றாட்டலுமே எம் பிள்ளைகளை மேன்மையுறச் செய்ததால் மகிழ்வுடன் வாழ்கின்றோம். கள்ளம் கபடமற்று தன்மானம் அறிவு ஆற்றல் ஆகிய உயர் பண்புகளுடன் வாழ்ந்த நீங்கள் ஒரு மாமேதை.

மரணத்திற்கு ஆயத்தப்படுத்த இறைவன் உங்களுக்கு போதிய காலம் தந்தார். தூய்மையுடன் திருவிருந்தருந்தி இறைவனோடு ஒன்றித்து
"நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே
உனக்கு ஆயத்தப்படுத்தப்பட்ட இராச்
சியத்தை சுவீகரித்துக்கொள்" என்று தம்மிடம் அழைத்துக்கொண்டார். நித்தியத்தில் இளைப்பாறுங்கள் தாயே.

சீவரட்ணம் குடும்பம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர் - கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமகள் முன்னாள் அதிபர்
## புஸ்பாவதி அன்ரனி
## புலம்பல்

அன்னையே ஆருயிரே
அம்மா எனும் சொல்லின் இலக்கணமே
கண்ணை இமை காப்பதுபோல்
என்னை நீ வளர்த்தாயே
ஒன்பது வயதிலே உன் கனவு விளங்கிடவே
பொன்னான உன் இதயம் பூவாக வேண்டுமென
பாலப் பருவத்தில் பால் குடிக்கும் காலத்தில்
வேம்படி ஹாஸ்டலிலே வேரறுத்த மரமானேன்
உன் கனவை நனவாக்க படிப்பையே இலக்காக்கி
பௌதிகவியல் பட்டத்தை பத்தொன்பதில் பெற்று வந்து
வேலையற்றோருடன் மாலையாய் சேரவே
அன்புமிக்க என் மாமன் அடைக்கல முத்துவுடன்
தோழில் எனைச் சுமந்த சுந்தர வடிவோன்
பண்டத்தரிப்பினிலே பலர் வீட்டில் படமானோன்
பிரசைகள் தலைவன் தபால் தந்தி பரிசோதகன்
சொல்வல்ல பெரியோன் சோர்விலா செபரட்ணமும்
சேர்ந்தபடி எடுத்த திருத்த முயற்சியாலே
பட்டதாரிகள் தெரிவுப் பரீட்சையும் இடம்பெற்று
இறைவனருளாலே இனிதாகத் தேறியதால்
எடுத்த எடுப்பிலே இருபதிலே வேலையேற்றேன்
இருபதிலே ஆசானாய் என் இனிய மாணவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதில் தந்தையுடன் நீ வார்த்த உரைக்கேற்ப
உண்மை நேர்மை கடமை எனும் கொள்கை சேர் கல்வியூட்டி

பாரினிலே பலதிக்கும் பரந்தவர்கள் என் தந்தை
தன்னுயிரை மக்களுக்காய் ஈந்து நலன் பெற்ற
இன்ஸ்பெக்டர் பொலிஸ் கந்தையா மகன் இராமநாதன்
அதிபராய் கொறோனராய் அன்பான கொடை வள்ளலாய்

ஆற்றிய சேவைபோல் ஆற்றுவது கண்டேனம்மா
இளவாலை ஆறு மாதம் யாழ் மடத்தில் ஐந்தாண்டு
நலமாகப்போக மீதி நாளெல்லாம் நெடுந்தீவில்
அழகான அத்தீவை அரங்கேற்றவேணுமென்று
அடிக்கல்லாய் அங்கிருந்த ஆலயம் மாவித்தியாலயத்தை

தரமுயர்த்த வேணுமென்ற தணியாத ஆவலாலே
கணவரவர் அதிபராயும் பதிலதிபர் நானாயும்
கனவை நனவாக்கக் கடுமையாய் உழைத்ததனால்
பெற்ற பிள்ளைகளைப் பேணும் நற்தவயாகமதை
கவனிக்க முடியாதெனக் கடவுளிடம் விட்டதனால்
உன் நெஞ்சில் சுமையாக என் குடும்பம் இருந்ததம்மா
வேலைவிட்டு ஓய்வுபெற்று வீடுநான் வந்தபோது
காலனவன் கடுப்பாகி என் கணவரைப் பறித்தபோது
என் செல்ல மகளாரே என்ன செய்யப்போகிறாய்
என்றேங்கிக் கதறியே இடிபோல் துடித்தாயே
அன்று வந்த காலனவன் அடுக்கடுக்காய் பேரெழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இளைய மகள் ராணியையும் அறம் காத்த கணவரையும்
மதன் போன்ற பாலனையும் மனம் நடுங்கப் பறித்தானே
இரக்கமற்ற காலனவன் இது போதாதென்று எண்ணி
உன் உயிராம் ஜெயசிங்கத்தை உலகமழுப் பறித்தானே
பாழும் உலகமதில் பாடுகள் எமைத்தாக்க
சோதனைகள் பெருகி வேதனையாய் வீதி கட்ட
படுத்த படுக்கையானாய் பாவி நானும் நோயானேன்
என் மூத்த மகளாரும் வவுனியாவில் வாழ்ந்ததனால்
அவளிருந்த இடம் தேடி நானும் பறந்ததனால்
என் இளைய மகனாம் இரக்கமே உருவான
நல்லாசான் நிரஞ்சனும் மருமகள் நிலானியும்
பல்லாண்டுகள் உமைப் பக்குவயாய்ப் பார்த்தார்கள்
மருமக்கள் யாவரையும் உயிர்போல் நீ மதித்தாலும்
மருமகன் என் கணவன் தெய்வப் பிறவி என்பாய்
இறுதி ஆவிதனை ஏங்கி நீ விட்ட போது
என் கணவர் சுற்றமெல்லாம் ஏங்கி நின்று பால் வார்க்க
ஆவலுடன் பருகி ஆக இறுதியாக
அன்ரனி நிராஞ்சனாம் உன் அருமைப் பேரனிடம்
ஆவலுடன் பால் பருகி ஆவியை விட்டாயோ.
ஆவி நீ விட்ட வேளை அருகே நான் இல்லையம்மா
அந்த வலி வேதனையை என் மகனே சுமந்தானம்மா
ஆவி நீ விட்டாயெனக் கேட்ட உன் பிரிய தம்பி
சொல்லின் செல்வன் டாக்டர் மதுரகவி அமுது
செவாலியர் எனப்படும் பாப்பரசர் பட்டம் பெற்றோன்
இனி முடியாதென்று கூறி லண்டன் தன்னில் களைத்திருந்தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதறியடித்த படி பறந்தோடி வந்தாரம்மா
எந்நாளும் தூரத்தே உன் நினைவில் வாழ்ந்து வந்த
உன் உயிர் மகன்மாரும் மகளாரும் தவித்தேங்கி
கனடா அவுஸ்திரேலியாக்கண்டங்களைக் கடந்தும்
கண் மூடு முன் பார்க்காது கதறியதைப் பார்த்தழவா
லண்டனிலே பிறாங்கோ பிரான்சிலே கறோலினி
அம்மா எனக் கதறுவதைக் காதாலே கேட்டழவா
தூரத்திலிருந்தே துடித்து வந்த ராஜேஸ் ரட்னேஸ் ஜானியும்
தலைமாட்டே நின்று கனன்றழும் மதன் சோபி குணாளனும்
கனடாவிலிருந்தே கண்ணீர் சிந்தும் அரியமலர் குணசீலி
அவுஸ்திரேலியாவிலிருந் தல்லலுறும் செரூபிமும் நிர்மலாவும்
முயன்றும் முடியாது லண்டன் நின்றழும் தவமணி மச்சாளும்
பாரெங்கும் பரந்து நின்று போனில் அழும் மருமக்களும் பெறாமக்களும்
கேவி அழுகின்றனரே பாவி நான் என் சொல்ல
மரணப் படுக்கை மட்டும் உன் மருமகனார்
அருட்திரு ஜெயசேகரம் அடிகளாரின்
அன்பையும் ஆசியையும் அமோகமாய்ப் பெற்றாயம்மா
உன் இனிய மருமகனார் அருட்திரு. சந்திரகாந்தன் கண்ணீரும்
அன்பான மருமகனார் ஆயர்திலகம் பேரருட் திரு.இராயப்பு யோசேப்பின்
ஆசியுடன்
உன் இறுதி யாத்திரையில் உதவியுடன் ஆசி ஈந்த
கலாநிதி குருமுதல்வர் அருட்திரு யஸ்ரீன் ஞானப்பிரகாசம்
கலாநிதி அருட்திரு புலேந்திரன் அடிகளார்
அருட்திரு சகாயநாயகம் அடிகளார்
அருட்திரு றெஜி ராஜேஸ்வரன் அடிகளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரருட் திரு. அலெக்சாண்டர் அடிகளார்
அதிபர் அருட்திரு. யேசுதாசன் அடிகளார்
மேன்மைமிகு அருட் சகோதரர்கள்
சகோதரிகள் யாவரினதும் ஆசி சேர
தென் இந்திய திருச்சபை நெடுந்தீவின்
போதகர் வண.யோன் செல்வம் ஆசியுடனும்
உன் கணவர் பிள்ளைகளை ஆவலுடன் தேடி
அமுது மாமாவின் அநுசரணை மேலோங்க
அதிபர்கள் மந்திரிகள் இதுவரை அறிந்திரா
அரச இரதமேறித் துறைமுகம் சேர்ந்தாயோ
ஆன்மா ஒருபோதும் அழிவதேயில்லை யம்மா

## பேரர்கள்
## நிரஞ்ஜெனி டானியேல், நிரஞ்ஜீவன், ரஜீவன் ஆகியோரின் இரங்கற் செய்தி...

அப்பம்மா !!!

நல்ல தமிழில் அழகாகக் கடிதங்கள் எழுதுவார். ஆறுதலான வார்த்தைகள், அப்பா அம்மாவுக்கு கீழ்படியவேண்டுமென்றும், நல்ல கெட்டிக்காரப் பிள்ளைகளாக படித்து வர வேண்டுமென்றும் அடிக்கடி எழுதுவார். எங்கள் மீது அதிக பாசம் உள்ளவர் நாட்டுப் பிரச்சினைகளால் தானும், அப்பப்பாவும் மற்றவர்களும் படும் துன்பங்களையும் எழுதுவார். இறைவன், தேவ தாயார் தான் தங்களை வழி நடத்துவதாகக் கூறி ஆறுதல் அடைவார். அவரைச் சில வருடங்களுக்கு முன் போய் பார்த்தோம். கட்டியணைத்துப் படங்களும் ஞாபகத்திற்கு எடுத்து வந்தோம். இனியெப்போ அவரைக் காண்போம். நெஞ்சையே உருக்கும் மனித வாழ்வின் முற்றுப் புள்ளி எவ்வளவு கொடூரமானது... இறைவா ஏன் இந்தக் கொடுமை??? முடிவுதான் எப்போ???

மெல்போர்ன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவுஸ்ரேலியாவில் வசிக்கும் அன்பு மகன் ஜெயராசா
## என் அம்மாவை நன்கறிந்த காலம் தொடங்கி... இறுதி மூச்சு வரை...

எல்லா உயிர்களுக்கும் ஓர் அம்மா உண்டு. அந்த அம்மாவிடம் உள்ள சேயன்பு மற்றெல்லா மனிதத்திலுமுள்ள அன்பை விட மேலானது. தனது என்பையே உருக்கி தான் உருக்குலைந்தாலும் தன் உடல், பொருள், ஆவியனைத்தையும் எல்லாக் கால, நேரத்திலும் வாரி வழங்கி வளர்த்திடும் பண்புடமை அவ்வன்பிலுள்ளது. அது சிலரிடம் அல்லது பலரிடம் வேறுபடலாம். அல்லது மாறுபடலாம். அவ்வன்பு சுய நல சார்புடையதென்றும் வாதிடலாம். ஏற்புடையதாகத் தென்படலாம். இருப்பினும் விதிவிலக்குகள் அமையலாம். அப்படியான விதி விலக்குகளில் ஒன்றாகத் தான் எனது அம்மாவை நான் பார்க்க முடியும். காரணங்கள் ஏராளம். சொல்லில் அடக்கமுடியாதவை. நான் அம்மாவை அறிந்த காலம் தொடக்கம் இவ்வுலகை நீங்கும் வரை... தனது மக்களில் மூவரை எதிர்பாராமல் இழக்க நேரிட்ட போதும், அதனால் நலிவடைந்த தன் கணவரை இழந்தபோதும் அவரினதும் அன்பில், அணைக்கும் தன்மையில், உபசரிக்கும் பண்பில், செயலில், சிரிப்பில், எழுதும் எழுத்தில், போதனையில் மாற்றமெதுவும் காண முடியவில்லை. வயது போகப் போக துயர துன்பங்களுக்கான போது அவரது "அன்புமானியில்" இவற்றின் அளவீடு என்றும் குறையவேயில்லை.

தீபகற்பத்தின் தலைத்தீவு நெடுந்தீவு. அது அம்மாவின் பிறப்பிடம். அப்பாவின் பிறப்பிடம் உறைவிடம் பட்டணமாகவிருந்தாலும் சொந்த ஊரும் அது தான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில்....

அம்மாவின் ஆசிரியப்பணி நெடுந்தீவு, மல்லாகம், பின்னர் நெடுந்தீவு என வரிசைப்பட்டது. அப்பா தீவகத்தில் தலைமை ஆசிரியர், அத்துடன் மரணவிசாரணை அதிகாரியும் கூட குடும்பவரிசையில் நான் ஐந்தாவது மூத்த உடன் பிறப்புகள் இருவர் வேம்படி மகளிர் கல்லூரியில் பெரியண்ணா வட்டு/யாழ்ப்பாணக் கல்லூரியில் தீவகத்தில் அப்பாவுடன் சின்னண்ணாவும் எனக்கடுத்த தம்பியும் மல்லாகத்தில் அம்மாவுடன் நானும் கடைக்குட்டிகள் இருவரும் சிறிது காலம் நான் அங்கும் இங்குமாக மாறி, மாறி இடமாற்றப்பட்டேன். ஈற்றில் அம்மா தீவகத்தில் அப்பாவின் பாடசாலையில் இணைந்து கொண்டார். குடும்பம் ஒன்றாகியது. அவ்வப்போது பிரச்சனைகளும் தலைதூக்கின. சம்பள நாட்களில் அப்பாவின் சம்பளம் ஊரார் உலைக்குப் போய்விடும். அம்மாவின் உத்தரவுக்கமைய அப்பாவினது அறைக்குப் போய் மேலங்கியின் இரு பக்க பொக்கெட்டுக்களில் கையைவிட்டு துளாவுவேன். சில்லறை தான் வரும். அம்மாவின் கேள்விகளுக்கு அப்பாவின் நீண்ட பட்டியல் வெளிவரும். அம்மாவின் பேச்சும் ஏச்சும் சில மணிக்கு இருக்கும். பின் மயான அமைதி நிலவும். அப்பாவின் பழக்கம் அது. பொருட்படுத்தமாட்டார். எருமை மாட்டில் மழை பெய்தது மாதிரி. அக்கொடையுடன் அவர் ஊட்டிய கல்வியும் தான் ஈற்றில் அவரை அவ்வூர் மக்கள் இன்றும் கனடா, இலண்டன் வரை போற்றிப் புகழுரைக்கின்றனர்.

இதற்கு அம்மாவின் பங்கும், அவரது சகிப்புத் தன்மையும், “ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்” என்ற அப்பாவினது நாளாந்த வாய்மொழியில் கொண்ட நம்பிக்கையும் ஆறுதலும் காரணமாக அமைந்து விட்டதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் காலையில் நாலு மணிக்கெல்லாம் இருவரும் எழும்பி விடுவார்கள். அப்பாவின் இறையன்பின் கீர்த்ததனைகள் இனிமையாய் காதில் ஒலிக்கும். பின்னர் காப்பியுடன் எம்மை எழுப்பி செப தபம் முடித்து பாடம் படிக்க அனுப்பி விடுவார்கள். அப்பா பாடசாலை வேலை, பாட ஆயத்தம், பொது நலச் சங்கங்களின் வேலைகளில் ஈடுபடுவார். அம்மா உதவியாளுடன் காலை, மதிய உணவு தயார் செய்வது மட்டுமல்ல, எமக்கான மதிய உணவைப் பாடசாலைக்கும் எடுத்து வருவா. அதனால் தான் என்னவோ அவர்களது பிள்ளைகள் யாரும் அவர்களின் எண்ணக் குறி தவறிப் போகவில்லை. மூத்த அக்கா இந்தியாவில் விஞ்ஞானப் பட்டப்படிப்பை 19 வயதில் முடித்து சாதனையொன்றையும் படைக்க வழி சமைத்தார்கள். அதனை அடுத்து மூத்த அண்ணாவும் குடும்ப நிதி நிலை காரணமாக தாமாகவே 19 வயதில் தபால் அதிபர் வேலையைத் தேடிக்கொண்டார். அடுத்த 6 வாரிசுகளும் அப்படியே ஊரிலே வங்கி இல்லை. ஒரு குறிக்கப்பட்ட தொகைப் பணம் தான் தீவக தபால் கந்தோருக்கு யாழில் இருந்து வழங்கப்படும். அங்குள்ள எல்லா அரச நிறுவனங்களுக்கும் தபால் கந்தோர் மூலமாகத்தான் சம்பளப்பணம் கிடைக்கும். சம்பள நாட்களில் அப்பாவின் தாயாரின் ஓய்வூதியம், அப்பா அம்மாவின் ஓய்வூதியம், அதனை விட ஆறு குடும்ப உறுப்பினர்களின் சம்பளத்தையும் சேர்த்தால் தபால் கந்தோரின் நிதி நிலைமை வங்குறோத்தில் வந்துவிடும். பல தடவைகள் தபால் அதிபர்கள் இதனை தெரிவித்துள்ளனர். அது மட்டுமல்ல "இராமநாதன் குடும்பத்தில் இருந்து ஆறு பேர்... அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் என்று ஒரே பாடசாலையில் கடமையாற்றுகிறார்கள். ஏதாவது நல்லது கெட்டது நடந்தால் பாடசாலையே மூடவேண்டிய நிலை" என்று கல்வி அமைச்சருக்கு புகார் செய்ய அமைச்சரும் பாராளமன்றத்தில் பா. உ. உயர்திரு. கே. பி. இரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் ஏன் அப்படி? என்று வினவ "அந்த இராமநாதன் குடும்பத்தில் தான் ஆசிரியர்கள் உள்ளனர். நீர் வேறு யாரையும் தாரும் அவர்களில் சிலரை இடமாற்றம் செய்கிறேன்" என்று பதிலுரைத்துள்ளார். தீவக பாடசாலைகள் ஒன்றிணைப்பை நான் மேற்கொண்ட போது தீவகம் வந்த பா. உ. என்னிடம் சொன்னார். "நீ கவலைப்படாதே இப்படி யாரோ செய்தபடியால் தான் உங்கள் குடும்பப் பெயரே கன்சாட்டில் பதிவாகியுள்ளது. அது பற்றி பெருமைப்படு. இப்படி நடக்க வேண்டுமென்பதற்காகவும் நடந்தேறிய விடயம் போலும்" என்றார். ஏதோ பெற்றோர்களது வழிகாட்டல் எமது குடும்பத்திற்கு மட்டுமல்ல அத்தீவக சமூகத்தில் ஏராளமானவர்கள் உயர்வதற்கும் வழி வகுத்தது என்றே சொல்லத் தோன்றுகின்றது.

பேரப்பிள்ளைகளின் வளர்ச்சியிலும் தினமும் கரிசனையாக இருந்தார். அவர்களின் ஆன்மீகம், கல்வி, உடல் வளர்ச்சியிலும் தேவையான அறிவூட்டல்களை அவ்வப்போது வழங்கி வருவார். வெளிநாட்டில் உள்ள பேரப்பிள்ளைகளுக்கு கடிதம் வரையும் போது அழகாக அறிவுரை கூறுவார். அவரது எழுத்துக்களில் தெளிவு இருக்கும். ஞானம் மிளிரும் அன்பு தெறிக்கும். ஈற்றில் பிரிவு கண்ணீரை வரவழைக்கும்.

மருமக்கள் யாவர் மீதும் மரியாதையும் அளவு கடந்த பாசமும் கொண்டிருந்தார். என்றுமே அவர்களைத் தம் மக்களாகவே எண்ணிக் கலந்து அன்பில் உறவாடுவார். எனவே தான் மருமக்களும் அவர்மேல் பிரியமாகவே இறுதி வரை இருந்தார்கள்.

**சகோதரத்துவத்தில்**

அம்மாவின் சகோதர அன்பு ஒரு தனித்துவமானது. எங்கும் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதவை. தனது கடிதத்தில் எழுதும் போதெல்லாம் சகோதர அன்பையே வலியுறுத்தி எழுதுவார். தனது இளைய சகோதரன் 87இல் சுட்டுக்கொல்லப்பட்டபோது அவர் அடைந்த வேதனை பல ஆண்டுகள் ஆகியும் தீரவில்லை. அவரைப் பற்றி பேசும் போதெல்லாம் கண்கள் குளமாகிவிடும். அவரது அண்ணா தனது துணையை இழந்த பின் தன் தங்கையின் நிழலையே தேடித் தினமும் காலையில் வருவார். அண்ணா வந்து விட்டார் என்று அவருக்குப் பிடித்தமான உணவைக் கேட்டு அங்கும் இங்கும் தேடி ஓடிச் செய்து கொடுப்பார். அதில் கணவரும் (அப்பாவும்) பங்கு கொண்டு மகிழ்வு கொள்வார்கள். அன்றைய தினம் மூவருக்கும் அலாதியாகப் போய்விடும். அம்மாவின் தம்பியரில் மூத்தவர் தான் நாம் அன்பாக அழைக்கும் "சொக்கிலேட் மாமா" அத்தீவகம் வரும்போதெல்லாம் தகரப்பெட்டி சொக்கிலேட்டுடன் தான் வருவார். அதன் விலையும் அப்படித்தான். எக்காலத்திலும் அதை அவர் கைவிடவில்லை. அதனால் தான் என்னவோ அவரின் மகள்மார் சிலர் ஏளனமாகச் சொல்வார்கள். "அன்பும் பாசமும் அங்கே.. அன்னமும் பாத்திரமும் இங்கே" என்று உண்மை தான். அதில் எந்த சந்தேகமும் இருக்கவில்லை. அம்மாவின் இரு இளைய சகோதரர்கள் மாமிமார் எம் மீது வைத்திருந்த அளவு கடந்த அன்பும் கருசனையும் நல் உதவியும் எம்முடைய வளர்ச்சிக்கு அக்காலத்தில் பேருதவியாய் இருந்தது என்றால் மறுப்பதற்கில்லை. அதனால் தான் அப்பா ஊருக்கு இறைக்க இவர்களின் ஊற்று எம்மை நிரப்பியது. தன் அக்கா மீது வைத்திருந்த பாசத்தில் வருடமொரு முறையென்றாலும் இலண்டனில் இருந்து யாழ் சென்று வந்தார். கடந்த ஒரு சில வருடங்கள் நாட்டு நிலைமை காரணமாகப் போய் வரவில்லை. அந்த அக்காவும் தம்பியைக் காணாது தவித்தா. ஏன் தம்பி வரவில்லை என்று கடைசிக் காலத்திலும் வினாவெழுப்பிக் கொண்டே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவின் ஆவல் பூர்த்தியாக வேண்டுமென்ற அந்தத் தம்பியும் தொன்னூற்றொரு வயதைத் தாண்டியும் தன் நலம் பாராமல் தும்பி போல் பறந்து யாழ் வந்தார். அந்த அன்புக்கு ஆண்டவன் துணை நிறையக் கிடைத்திருக்க வேண்டும். இலண்டனில் உள்ள மாமாவின் பிள்ளைகளும் மாறுத்தரம் சொல்லாமல் அவரின் சகோதர பாசத்திற்கு தலை வணங்கி தடைக்கல்லாக நில்லாமல் அனுமதி அளித்து யாழ்ப்பாணம் வழி அனுப்பி வைத்தார்கள். அப்பாச நேசத்திற்கு நாமும் என்றும் தலை வணங்கி நன்றி கூறுகின்றோம்.

ஊரில் அப்பா பாடசாலை நேரம் போக மிகுதி நேரத்தில் பொது நலத்தொண்டு தான். விடிய ஒரு கூட்டம் ஜனங்கள் முத்தத்தில் கூடிவிடுவார்கள். பொலிஸ்காரர் யாரும் ஊரில் இல்லாக் காலம் அது. பிரச்சனைகளை அம்மாவும் கேட்டறிந்து தக்க அறிவுரைகளை வழங்கி வருவார். பெயரையும் "வவா" என்று இரண்டு எழுத்துக்களில் வைத்து விட்டார்கள். எடுபிடிக்கு வாய்த்தவன் நான் தான். அப்பா போகுமிடமெல்லாம் பைல்கள் காவும் வேலை எனக்குத்தான்.. மரண விசாரணையின் போது நானும் கூடவே போகவேண்டும். ஒரு தடவை கடற்கரையில் அடைந்த உடல் பங்களாதேஸ்காரருடையது. விசாரணை முடிந்தவுடன் பொலிஸ்காரரிடம் புதைக்கும்படி கூறி விட்டு அவர் போய்விட்டார். பொலிஸ்காரரும் என்னிடம் இதில் கொஞ்ச நேரம் நில்லுங்கோ மண்வெட்டி எடுத்து வருகிறோம் என்று சொல்லிவிட்டுப் போனவர்கள் மணி எட்டாகியும் வரவில்லை. கடற்கரைக் காற்றும் மரங்களின் ஓலமும் என் குருதியை உறைய வைத்தது. பசாசுகளின் வருகையை எண்ணி தனியே நாலா பக்கமும் ஏக்கத்துடன் பார்த்தபடியேநிற்கிறேன். வயதும் 23. அம்மா என்னைக் காணாமல் தேடத் தொடங்கிவிட்டார். ஈற்றில் பொலிஸ்காரர் காவல் வைத்த விடயம் தெரிய வந்ததும் உடனே பக்கத்து வீட்டிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினரை அனுப்பி என்னை மீட்டுக்கொண்டார். வந்த மைத்துனர்களும் சும்மா வந்தார்களா? ஒளித்திருந்து கூக்குரலும் கல்லெறியும் நான் அலறிவிட்டேன். அப்பா அது பற்றி பெரிதாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ கடைசிக் காலத்தில் நான்தான் அவரின் வாரிசாக வரவேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்கலாம். அதனால் தான் 1987இல் நான் நோர்வேயில் இருந்தபோது "நாம் 15000 பேருடன் நெடுந்தீவில் வாழ்ந்தோம். நீ தனித்துப் போய் விடுவாய் இரண்டு வருடம் முடிய ஊருக்குத் திரும்பி வா என்று கடிதம் பல எழுதினார்கள். நாட்டு நிலைமை சீரானால் வருவேன் என்று பதில் போட்டேன். ஆனால் அது கை கூடவேயில்லை. திசை மாறி எங்கேயோ கரை சேர்ந்துவிட்டேன்.

**ஆன்மீகத்தில்...**

அம்மா கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தாலும் அப்பாவின் புரட்டஸ்தாந்து சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். அதன் ஆராதனைகளில் பங்கு பற்றுவதோடு மட்டுமல்லாமல் பிள்ளைகளையும் ஈடுபாடுகொள்ள ஊக்கிவித்தார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடமையாற்றிய சகல அமெரிக்க போதனாசிரியர்களும் மிஷனறிமார்களும் பின்லாந்து மிஷனறிமார்களும் பேராயர்களும் குருக்களும் அடிக்கடி அத் தீவகத்திற்கு வரும்போதெல்லாம் எமது வீட்டில்தான் தங்கல், விருந்தோம்பல். அதற்கென்றே அப்பா பத்தடி நீளத்தில் இரு மேசைகள் செய்து வைத்திருக்கிறார். அம்மாவும் மனம் தளராது அவர்களுக்கேற்ற மேற்கத்திய உணவு வகைகளை உதவிகளோடு செய்து கொடுப்பார். அத்தீவக புரட்டஸ்தாந்து சமய வளர்ச்சியில் இருவரதும் பங்கு அளப்பரியது.

பிற்காலத்தில் அம்மா தேவ தாயார் அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் மீது அளவு கடந்த நேசமும் பக்தியும் கொண்டார். நடை தளர்ந்த போதும் நாளாந்தப் பூசைகளில் தவறாது பங்கு கொள்வார். கடைசிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் அவரின் பக்தி எவ்விதத்திலும் அருகக்கூடாது என்று ஆண்டவளே பார்த்து ஜேர்மனியில் குருவாகப் பணிபுரிந்த எமது மைத்துனர் அருட்தந்தை கலாநிதி ஜெயசேகரம் அடிகளார் அவர்களை யாழ்ப்பாணம் அதுவும் வீட்டுக்கண்மையிலேயே பணிபுரிய அனுப்பிவைத்தார் எனலாம். அவரும் அம்மாவைத் தினமும் தரிசித்து ஆசீர்வாதமும் பரிசுத்த நற்கருணையும் வழங்கி வந்தார். இறுதிக் கிரியைகளில் அம்மா தரிசித்த ஆலயங்களின் அருட்தந்தைகள் துணை ஆயர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் உட்பட பன்னிரண்டு குருமார்கள் வரை பங்கு கொண்டு அதனை நிறைவேற்றி மனதுருக வைத்து விட்டனர். அத்துடன் விக்டோரிய மானில பங்குத் தந்தை அருட்திரு யோகராசா அடிகளார் எதிர் பாராத விதத்தில் பங்கு கொண்டதும் மேலும் ஒரு நற்சாட்சி அவருக்காக அங்கு பிரசன்னப்படுத்தப் பட்டுள்ளதெனலாம். எனது துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறும் பல கடிதங்களை அம்மா எழுதுவார்கள். 90 வயதைத் தாண்டிய பின்பும் எழுதியிருந்தா... இனி அவை யாரிடமிருந்து காலம் கொன்றொழித்து விட்டது.

"அம்மாவென்றழைக்காத உயிர் இல்லையே" இது தான் கடந்த சில மாதங்களாக அதிகாலையில் என் இதயத்தில் இருந்து தினமும் ஓசையுடன் கண்ணீர் மல்க ஒலித்த வரிகள். எம் போற்றுதலுக்குரிய அந்த அன்னைக்கு நல் மாமிக்கு அப்பம்மாவுக்கு கூடவேயிருந்து செய்ய வேண்டிய எமது கடமைகளை செய்ய முடியாமல் போனதையிட்டு தவித்தோம். வெளிநாட்டிலுள்ள ஏனைய மூன்று சகோதரர்களும் பிள்ளைகளும் என்னைப் போன்றே தவித்தார்கள். எமக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக்கவேயில்லை. மூத்த சகோதரியார் பிள்ளைகள் அங்கேயே இருந்தபடியால் அவர்கட்கு அந்தப் பாக்கியம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைப்பட்டோம். எமக்கில்லையே என்று. எனது துணைவியாரும் எமது பிள்ளைகளும் அவரின் பிரிவையிட்டு கண்ணீர் சொரிகின்றனர். இனி இந்த மனங்கள் என்றுமே அதையெண்ணி மௌனிக்காது. அம்மா நீ மீண்டும் வருவாய் புது உலகில். அப்போது நான் மட்டுமல்ல என் குடும்பமும் உன்னை விட்டு அகலவே மாட்டோம்.

## அன்பர்கள் அஞ்சலியிலிருந்து சில வரிகள்

தான் பெற்ற பிள்ளைகள் போல் எம்மை வெகுவாக நேசித்த எம் அன்னை லண்டனில் இருந்த எம்மை எப்படியோ தன் இறுதி யாத்திரைக்கு அழைத்துக்கொண்டது எமக்கு எதிர்பாராத ஆச்சரியத்தையும் மிகுந்த மன நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் அவரை இழந்து வருந்தும் அவர் பிள்ளைகட்கும் பேரப்பிள்ளைகளுக்கும் அவர் பிரிய தம்பி கலாநிதி அமுதுவுக்கும் எம் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

Dr. & Mrs.மருதையினார்
லண்டன்

அன்பும் பண்பும் நிறைந்த என் தாயாரின் உற்ற சிநேகிதி தூய அறிவுடனும் உறுதியான மனதுடனும் உன்னதமான நீடிய வாழ்க்கை வாழ்ந்து உலகத்தை நீத்துள்ளார். அவரை இழந்து வருந்தும் யாவர்க்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கீதபூஷணம்
திரு.வி.சுந்தரலிங்கம் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்பட்ட கடைமைகளைச் செய்வதே யாகம். பலனில் பற்றின்றி கடமைக்காக செயல்படுவாயாக. இதனால் மேன்மையடைவாய் என்ற உண்மையை உணர்ந்து நிறைவான தொண்டாற்றி இறைபதம் சேர்ந்துள்ள அன்னைக்கு என் இதய அஞ்சலிகள்

நெடுந்தீவு லக்ஸ்மன்

(உதயன் ப.நி)

திருமதி ஞானப்பூ இராமனாதனிடமும் அவர் பிள்ளைகளிடமும் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை என் நல்வினைப் பயனாகவே கருதுகிறேன். பல தீபங்கள் உன்னால் தான் ஒளிருமானால் தீக்குச்சியாயிருக்க அச்சம் கொள்ளாதே எனும் கொள்கைக்கேற்ப வாழ்ந்து வழிகாட்டிய அன்னைக்கு எம் இதய அஞ்சலிகள். அவரை இழந்து வருந்தும் குடும்பத்தாருக்கு ஆறுதலளிக்க இறைவனை வேண்டுகிறேன்.

திரு.கனகரத்தினம் J.P

M.M.C, Jaffna

அழகான பெண் ஓர் இரத்தினம் குணமான பெண். ஒரு பொக்கிஷம் என்பர். இரண்டும் சேர அடக்கம். உண்மை கற்பு எனும் அணிகலங்களுடன் வாழ்ந்து ஏனையோரையும் அவ்வழி வாழ வைத்த அன்னைக்கு என் இதய அஞ்சலிகள்.

திரு. எஸ்.கோபாலசிங்கம் அவர்கள்

முன்னாள் தலைவர், ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனால் தனக்குத் தரப்பட்ட வாழ்க்கையை அன்போடும் பணிவோடும் மரியாதையுடனும் ஏற்று கர்வம் பொய்மை கோபம் என்பன அணுவும் அணுகாது வாழ்ந்து வையகம் புகுந்த அன்னைக்கு என் அன்பு அஞ்சலிகள்.

திரு. மு.இராசநாயகம் அவர்கள்
முன்னாள் அதிபர்,
வட்டாரக்கல்வி அதிகாரி.

என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற இலட்சியத்துடன் எம் தீவகக் குழந்தைகளின் கல்விக்காக தன்னையே அர்ப்பணித்தவர். அவர் வம்சம் வாழ்க.

திரு.திருமதி அரசரட்ணம் குடும்பம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்

வளையாத பாதையில் நடைபோட்டால் வெற்றி உன்பக்கம் எனும் வேதாந்தத்தை உணரச்செய்து உயரிய சிந்தனைகளை ஓவியமாக்கிய ஆசிரியை அன்னைக்கு என் இதய அஞ்சலிகள்

திரு.திருமதி எஸ்.கிருஷ்ணதாஸ் குடும்பம்
அதிபர் நெடுந்தீவு மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரைக் கண்கண்ட தெய்வமாய் போற்றி அவருக்கு மணிமுடியாகவும் தன் குழந்தைகட்கு இலட்சியத் தாயாகவும் தம் மாணவராகிய எமக்குத் தெய்வீக வழிகாட்டியாகவும் வாழ்ந்த எம் அன்னை என்றும் எம்மனதில் வீற்றிருப்பார்.

திரு.திருமதி இரா.தர்மரட்ணம் தயாநிதி குடும்பம்
ஆசிரியர்கள்

# My Grandma

Dare to do Right Dare to be True
You have a work that no others can do
Do it so bravely so kindly so well
The angels will hasten the story to tell

Thus she taught me and I learned
it and follow her path
Though I miss her she will always
Live in my heart

Loving Grand daughter
Gr.Mrs.Angeli shan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு

- இறைவனைத் தவிர வேறு எதிலும் பற்று வைக்கக்கூடாது.
- நாவினால் தடுமாறுவதைவிட நடைபாதையில் தடுமாறி விழுவது மேல்.
- பிறருக்கென்று வாழ்பவர்களே வாழ்பவர்கள்; மற்றையோர் நடைபிணத்திற்கு சமமானவர்கள்.
- தாயின் இதயத்திலிருந்தே குழந்தையின் கல்வி தொடங்குகிறது.
- துன்ப காலத்தில் பெற்றோரைப் பாதுகாப்பவனே மகன் எனப்படுவான்.
- மரணத்தைக் கண்டு பயப்படுவது போல் பாவங்களைக் கண்டு விலகிக்கொள்.
- ஆசை உள்ளவர்களிற்கு துன்பம் அதிகம்.
- கொடுமையான பொய்கள் மௌனமாகத்தான் சொல்லப்படுகின்றன.
- அமைதியான உள்ளம் அஞ்சாமையின் உறைவிடம்.
- அழிவைத் தருவது இரண்டு பொறாமை, கோபம்.
- உண்மைக்கு நடுவே வளரும் குழந்தை நீதியோடு வாழக் கற்றுக்கொள்ளும்.
- உண்மை மௌனிப்பதுண்டு; மரணிப்பதில்லை.
- கடந்த காலத்தில் நல்லது செய்திருந்தால் அது நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று அமரதீபமாகிவிட்ட

எங்கள் அன்புத் தெய்வத்தாய்

திருமதி.ஞானப்பூ இராமநாதன்

இறைபதமடைந்த போது எமது ஆறாத்துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி - தந்தி ஆகியன மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும், இரவும் பகலும் உணவு வழங்கிக் கவனித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவி புரிந்தவர்கட்கும், ஆத்ம சாந்தித் திருப்பலி நடாத்திய அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகளாருக்கும், இறுதி ஆசிர் வழங்கியவராகிய குரு முதல்வர் அருட்திரு.கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கும், இறுதி பிரார்த்தனையில் பங்கு பற்றிய அருட்திரு.கலாநிதி புலேந்திரன் அடிகளார் அருட்திரு.சகாயநாயகம் அடிகளார், பேரருட்திரு. அலெக்சாண்டர் அடிகளார், அதிபர் அருட்திரு.யேசுதாசன் அடிகளார் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத்திற்குரிய அருட்சகோதரர்கள், சகோதரிகள்,

தென் இந்தியத் திருச்சபை போதகர் வண.யோண்செல்வம்

அவர்கட்கும், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கட்கும்

மற்றும் வரமுடியாது வவுனியா நின்று கண்ணீர் விடும்

உறவுகட்கும் துயரத்தில் கலந்து கொண்ட யாவர்க்கும்,

இறுதி பிரார்த்தனையில் கலந்து கொண்ட

அன்னம்மாள் பாடகர் குழாமிற்கும்

அன்னாரின் இறுதி யாத்திரையைச் சிறப்பாக நடாத்த உதவிய

மைத்துனி ரோகினி குடும்பத்திற்கும்

சகோதரி திருமதி தோமஸ் குடும்பத்திற்கும் சகோதரர்


நீக்கிலாப்பிள்ளை குடும்பத்திற்கும், மைத்துனர் இம்மானுவேல்,

தம்பி இராசநாயகம் குடும்பத்திற்கும்

தம்பி நித்தியமோகன் குடும்பத்திற்கும் அயலவர்கட்கும்

எம் உளம் கனிந்த நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கறைபடாத கைகளும் மாசற்ற

மனமும் உடையவர்

பொய்த் தெய்வங்களை நோக்கித்

தம் உள்ளத்தை உயர்த்தாதவர்

வஞ்சக நெஞ்சோடு ஆணையிட்டுக் கூறாதவர்

இவரே ஆண்டவரிடம் ஆசி பெறுவார்"

[திருப்பாடல்கள் 24:4-5]

"ஏனெனில் கேடு வரும் நாளில்

அவர் என்னைத் தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்"

திருப்பாடல் 27 : 5]

நம் ஆண்டவன் இயேசு வல்லமையுள்ள

தம் தூதரோடு வானிலிருந்து வெளிப்படும் போது

இப்படி நிகழும். அப்பொழுது நம் ஆண்டவர்

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை

ஏற்காதவர்களையும் தண்டிப்பார்.

-[தெ. 2 : 7 -8]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org